தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066


dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 215 | 4 Pages | 3.3.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 215 | 4 பக்கங்கள் | 3.3.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்**
**செல்லா துயிருண்ணுங் கூற்று**

**விளக்கம்:**
**கொல்லாத அறத்தை மேற்கொண்டு நடக்கின்றவனுடைய வாழ்நாளின் மேல், உயிரைக்கொண்டு செல்லும் கூற்றுவனும் செல்லமாட்டான்.**

## உ.பி. மகா கும்பமேளா: குடும்பத்துடன் மீண்டும் ஒன்றிணைந்த 50 ஆயிரம் பக்தர்கள் மகிழ்ச்சி



பிரயாக்ராஜ், மார்ச். 3

உத்தர பிரதேசத்தில் 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற கூடிய மகா கும்பமேளா நிகழ்ச்சி கடந்த ஜனவரி 13ந்தேதி தொடங்கியது. இந்தியாவின் பழமையான கலாசாரம் மற்றும் மத பாரம்பரியங்களை உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாற்றும் பெருமை மிக்க மகா கும்பமேளாவுக்கு இந்த வருடம் 40 கோடி பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

அவர்களின் வருகையை கவனத்தில் கொண்டு, 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வசதி ஏற்படுத்தப்பட்டது. 1,800 ஹெக்டேர் பரப்பளவில் வாகன நிறுத்த வசதிகள், 2,750 கண்காணிப்பு கேமராக்கள், 15 ஆயிரம் துப்புரவு பணியாளர்கள், 25 ஆயிரம் தொழிலாளர்கள், 24 மணிநேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு மையம் உள்ளிட்டவற்றை அரசு அமைத்திருந்தது. இதனால், ரூ.2 லட்சம் கோடி வருவாய் கிடைக்க கூடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், எந்தவித பெரிய அசம்பாவித சம்பவங்களும் இன்றி 45 நாட்களில், இந்த மகா கும்பமேளா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று முடிந்தது. 65 கோடிக்கும் கூடுதலான பக்தர்கள் கும்பமேளாவில் பங்கேற்று புனித நீராடியுள்ளனர்.

இந்த சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக பக்தர்கள் அலை கடலெனதிரண்டு வந்து புனிதநீராடலில் கலந்து கொண்டபோதும், வந்திருந்த பக்தர்களில் பலர் அவர்களுடைய அன்புக்குரியவர்களிடம் இருந்து பிரிந்த சோக நிகழ்வும் ஏற்பட்டது.

எனினும், முதல்மந்திரி யோகி தலைமையிலான அரசு மேற்கொண்ட முயற்சியால், 54,357 பேர் அவர்களுடைய குடும்பத்துடன் மீண்டும் இணைந்தனர். அவர்களில் பலர் பெண்கள் ஆவர். இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் மற்றும் நேபாளத்தில் இருந்து சென்ற அவர்கள் மீண்டும் குடும்பத்துடன் ஒன்றிணைந்தனர்.

இதில், பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் நிகழ்ச்சி தடையற்ற முறையில் நடக்க வேண்டும் என்பதற்காக, டிஜிட்டல் கோய பயா கேந்திரா அரசால் அமைக்கப்பட்டது. கும்பமேளா பகுதியில் 10 இடங்களில் இந்த மையங்கள் அமைக்கப்பட்டன. இதன் உதவியால், 35 ஆயிரம் பேர் குடும்பத்துடன் இணைந்தனர்.

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முகம் கண்டறியும் சாதனங்கள், பன்மொழி ஆதரவு உள்ளிட்டவற்றின் உதவியுடன் இந்த மையங்கள் செயல்பட்டன. இதேபோன்று என்.ஜி.ஓ. அமைப்பினரும் பாராட்டத்தக்க பணிகளை மேற்கொண்டனர். இதுபோன்ற 50 ஆயிரம் பக்தர்கள் அரசின் தீவிர முயற்சி மற்றும் என்.ஜி.ஓ. அமைப்பினரின் செயல்பாடுகளால் மீண்டும் குடும்பத்துடன் ஒன்றிணைந்த மகிழ்ச்சியான நிகழ்வு நடந்துள்ளது.

## இன்னும் ஒரு மாதத்தில்... இந்திய ரெயில்வேக்கு அதி நவீன, சக்தி வாய்ந்த என்ஜின்



புதுடெல்லி, மார்ச்.3

குஜராத்தின் தஹோத் நகரில் உள்ள ரெயில்வே பணிமனைக்கு சென்ற மத்திய ரெயில்வே துறை மந்திரி அஷ்வினி வைஷ்ணவ் ஆலையில் நடந்து வரும் உற்பத்தி சார்ந்த பணிகளை பார்வையிட்டார்.

இதன்பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 89 சதவீத உப பொருட்களை கொண்டு ரெயில் என்ஜின் உருவாகி வருகிறது. குஜராத்தில் முதன்முறையாக இந்த வசதி சாத்தியப்பட்டு உள்ளது என கூறியுள்ளார். 100 சதவீதம் உள்நாட்டு தயாரிப்புகளாக இந்த என்ஜின்கள் இருப்பதற்காக நம்முடைய என்ஜினீயர்களும் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களும் கடுமையாக உழைத்து வருகிறார்கள்.

இவ்வகை என்ஜின்களுக்கு ஏற்றுமதி முக்கியத்துவம் சார்ந்த வாய்ப்பும் உள்ளது. முதல் என்ஜின் இன்னும் 30 முதல் 40 நாட்களில் பயன்பாட்டுக்கு தயாராகி விடும். சரக்கு ரெயில்களின் வேகம் மேம்பட வேண்டும் என்பதே ரெயில்வே துறையில் முக்கிய கருத்துருவாக உள்ளது என கூறினார்.

இந்நிலையில், ரெயில்வே அதிகாரி ஒருவர் இன்று கூறும்போது, 9 ஆயிரம் குதிரைதிறன்கொண்ட என்ஜின்கள் தஹோத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. டிஜிட்டல் கண்காணிப்பு சாதனம், கவச உபகரணம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த அம்சங்களுடன் இந்த என்ஜின் உருவாகி வருகிறது.

இதனால் இந்திய ரெயில்வேக்கு இன்னும் ஒரு மாதத்தில் அதி நவீன, சக்தி வாய்ந்த என்ஜின் கிடைக்க உள்ளது. இது 4 ஆயிரத்து 500 முதல் 5 ஆயிரம் டன் எடை கொண்ட சரக்கு ரெயிலை இழுத்து செல்லும் திறன் கொண்டிருக்கும். அதனுடன் மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் செல்லும் ஆற்றலும் கொண்டு இருக்கும். இதனால், சரக்குகளை கையாள்வது என்பது எளிமை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரைவாக சரக்குகளை அனுப்பும்போது, அது மக்களுக்கு பயனளிக்கும் வகையில் இருக்கும்.

## அரியானா: காங்கிரஸ் இளம் பெண் தொண்டர் படுகொலை; சூட்கேசில் அடைத்து வைத்த கொடூரம்

ரோத்தக், மார்ச். 3

அரியானாவில் ரோத்தக் நகரின் சம்ப்லா பகுதியில் உள்ள பஸ் நிலையத்தில் நீல நிற சூட்கேஸ் ஒன்று மூடப்பட்ட நிலையில் நீண்டநேரம் கிடந்துள்ளது. இதுபற்றி தகவல் அறிந்து போலீசார் வந்து அதனை கைப்பற்றி விசாரணை நடத்தினர். இதில், இளம்பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டு, சூட்கேசுக்குள் அடைத்து வைக்கப்பட்டு இருந்தது தெரிய வந்து போலீசார் அதிர்ச்சி அடைந்தனர். இதுபற்றி சம்ப்லா டி.எஸ்.பி. ரஜ்னீஷ் குமார் கூறும்போது, சம்ப்லா பஸ் நிலையத்தில் கிடந்த சூட்கேசில் பெண் ஒருவரின் உடல் கைப்பற்றப்பட்டது. அவர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த தொண்டரான ஹிமானி நர்வால் என அடையாளம் காணப்பட்டு உள்ளது. இந்த படுகொலை பற்றி விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு ஒன்றை அரியானா போலீசார் அமைத்துள்ளனர் என்றார். அந்த இளம்பெண்ணின் மொபைல் போனும் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. சைபர் பிரிவு மற்றும் தடயவியல் துறை போலீசாரின் உதவியையும் நாங்கள் கோரியுள்ளோம். அனைத்து கோணங்களிலும் விசாரித்து வருகிறோம் என கூறியுள்ளார். நர்வாலின் தாய் மற்றும் சகோதரர் டெல்லியில் வசிக்கின்றனர். இவர் அரியானாவில் தனியாக வசித்து வந்திருக்கிறார் என டி.எஸ்.பி. கூறியுள்ளார்.

# தன்னம்பிக்கையுடன் தேர்வெழுதுங்கள் பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு முதல் அமைச்சர் வாழ்த்து





சென்னை, மார்ச். 3

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்நாட்டின் 12ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவச் செல்வங்களுக்கான பொதுத் தேர்வுகள் முறையே 03.03.2025 மற்றும் 05.03.2025 அன்றும் தொடங்க இருக்கின்றன. 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வினை 8,21,057 மாணவ, மாணவியர்களும், 11ஆம் வகுப்பு பொதுத்தேர்வினை 8,23,261 மாணவ, மாணவியர்களும் தேர்வெழுதவுள்ளனர்.

கடந்த ஓராண்டுகாலமாக மாணவச்செல்வங்களாகிய உங்களுக்கு உங்களது பெற்றோர்கள், ஆசிரியர்கள் உங்களது கல்விக்கு மிகுந்த உறுதுணையாகவும் தூண்டுகோலாகவும் இருந்து வழிநடத்தியிருப்பார்கள். அவர்களது அரவணைப்பில் நீங்கள் பொதுத் தேர்வினை எதிர்கொள்ள ஆயத்தமாக இருப்பீர்கள். இப்பொதுத்தேர்வுகள் உங்களது உயர்க்கல்விக்கும். வாழ்க்கைக்கும் மிக முக்கியமான அடித்தளமாகும். நீங்கள் தேர்வினை மன அமைதியுடன், தன்னம்பிக்கையுடன் எழுத வேண்டும்.

நீங்கள் இதுவரை செய்த முயற்சிகள், உங்கள் தேர்வில் நல்ல முடிவுகளைத் தரும். உங்களின் உழைப்பில் முழு நம்பிக்கையும் எனக்குள்ளது. பதற்றமின்றி, உற்சாகத்துடன் தேர்வுகளை எதிர்கொள்ளுங்கள். உங்கள் உடல்நலம், தூக்கம், உணவு மற்றும் மனநிலையை கவனித்துக் கொள்ளுங்கள். உங்களது உயர்கல்விக்காக புதுமைப்பெண், நான் முதல்வன் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. நானும் தமிழ்நாடு அரசும் உங்கள் பக்கத்திலேயே எப்பொழுதும் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம். உங்கள் கடின உழைப்புக்கு முழு வெற்றி கிடைக்க என் மனமார்ந்த வாழ்த்துகள் என கூறியுள்ளார்.

## உலகத்தர கல்வி பயில, தமிழக உயர் கல்வி நிறுவனங்களுக்கு மலேஷியா சுற்றுலாத்துறை அழைப்பு




சென்னை நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம் சாலையில் அமைந்துள்ள மலேஷிய சுற்றுலாத்துறை அலுவலகத்தில், வியாழன் (27ந் தேதி) காலை "ஸ்டடி மலேஷியா அகாடமிக் கனெக்ட் 2025" சிறப்பு கருத்துகூடல் நிகழ்ச்சி நடைபெற்றது. ஸ்டடி மலேஷியா மற்றும் ஐ.டி.கே. சர்வ தேச கல்விச்சேவை நிறுவனத்துடன் இணைந்து மலேஷிய சுற்றுலாத்துறை நடத்திய நிகழ்விற்கு தென்னிந்தியா மற்றும் இலங்கைக்கான மலேஷிய சுற்றுலாத்துறை இயக்குநர் ஹிஷாமுத்தீன்முஸ்தபா தலைமை தங்கினார். டூரிஸம் மலேஷியா வர்த்தக அதிகாரி சையது வரவேற்று பேசினார். ஐ.டி.கே. எஜூகேஷன் குரூப் ஆப் கம்பெனிஸ் தலைமை செயல் அதிகாரி டாக்டர் ஜோசப் பேசும்போது, தமிழ் நாட்டு மாணவர்கள் சர்வதேச உயர் கல்வி பெற வேண்டியதின் அவசியம் மற்றும் வாய்ப்புகள் குறித்து குறிப்பிட்டார். ஸ்டடி மலேஷியா சென்னை நிறுவன இயக்குநர் திரு பேசும்போது, மலேஷியாவில் உள்ள பிரசித்தி பெற்ற பல்கலைக் கழகங்கள், சர்வதேச பல்கலைக்கழகங்களில் தமிழக மாணவர்களுக்கான உயர் கல்வி வாய்ப்புகள் குறித்து விவரித்தார்.

நிகழ்ச்சியில் பெத்தேல் குரூப் ஆப் இன்ஸ்டிடியூசன்ஸ் இயக்குநர் தோறீன் ராபின், பெண்கள் கிறிஸ்டின் கல்லூரி முதல்வர் டாக்டர் லிலியன் ஜஸ்பர், ஆரோ எஜூகேஷன் சி.இ.ஓ. மாலதி, விநாயகா மிஷின் ரிசர்ச் பவுண்டேஷன் டீன் டாக்டர் மார்த்தா கிரிசில்டா, எஸ்.ஆர்.எம். இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி பேராசிரியர் டாக்டர் மினு, சத்தியபாமா இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி பேராசிரியர் டாக்டர் நாகராஜன், க்ரீன்பீல்ட் இன்டர்நேஷனல் ஸ்கூல் சி.இ.ஓ. டாக்டர் ஆலயம்மாள் மேத்தியூ, முஹம்மது சதக் என்ஜினீயரிங் கல்லூரி முதல்வர் சீனிவாசன், முஹம்மது சதக் என்ஜினீயரிங் கல்லூரி இயக்குநர் விக்னேஷ், பெண்கள் கிறிஸ்டின் கல்லூரி பேராசிரியர் டாக்டர் ஷாஜினி ஜூடித் டயானா, பெண்கள் கிறிஸ்டின் கல்லூரி பேராசிரியர் ஏஞ்சலினா ஸ்ரீதேவி, சாய் ராம் இன்ஜினியரிங் டீன் டாக்டர் ரினே ராபின், புதிய பரிமாணம் டிவி புஹாரி ஷரீப் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நிகழ்வில் தலைமையுரையாற்றிய மலேஷிய சுற்றுலாத்துறை இயக்குநர் ஹிஷாமுதீன் முஸ்தபா, மிக குறைந்த கட்டணத்தில் தமிழக மாணவர்கள் உயர்கல்வி கற்க விருப்பமான இடமாக மலேஷியா திகழ்வது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த நிகழ்ச்சி மூலம் தமிழக கல்வி நிறுவனங்களுடனான புரிதல்கள் வலுவடைந்துள்ளது. வரும் கல்வியாண்டில் மலேஷிய உயர்கல்வி கட்டமைப்புகள், மாணவர்களுக்கான கல்வி பயணக்குழு திட்டங்கள், சலுகைகள், கலாச்சார புரிதல் ஏற்படும் வகையில் தமிழக கல்வி நிறுவன பிரதிநிதிகள் குழுவை மலேஷியாவிற்கு அழைத்து செல்ல திட்டமிடப்பட்டு இருப்பதாக தெரிவித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடு மற்றும் ஒருங்கிணைப்பை பாராட்டி மலேஷிய சுற்றுலாத்துறை இயக்குநர் ஹிஷாத்தீன் முஸ்தபா, ஐ.டி.கே. சர்வதேச கல்விச்சேவை நிறுவன சி.இ. ஓ. டாக்டர் ஜோசப்பிற்கு சுற்றுலாத்துறை சிறப்பு மெமண்டோ வழங்கி கவுரவித்தார். 2026 ஆண்டுக்கான மலேஷிய சுற்றுலாத்துறையின் வீரா மற்றும் மஞ்சா என்ற இரு சூரிய கரடியின் புதிய லோகோவை இயக்குநர் ஹிஷாத்தீன் முஸ்தபா வெளியிட, ஐ.டி.கே. குரூப் கம்பெனி நிறுவனர் டாக்டர் ஜோசப் பெற்றுக் கொண்டார். முடிவில் நிகழ்ச்சியில் அனைத்து கல்வி நிறுவன பிரதிநிதிகளுக்கு பதக்கம் மற்றும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.

## தமிழகத்தில் இதுவரை 2,630 கோவில்களுக்கு குடமுழுக்கு: அமைச்சர் சேகர்பாபு தகவல்



சென்னை, மார்ச். 3

சென்னை தங்கசாலையில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அல்லூரி வெங்கடாத்திரி சுவாமி மடம் (எ) ராமர் கோவிலுக்கு மீண்டும் குடமுழுக்கு நடத்த ரூ.26.43 லட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பணிகள் நிறைவு பெற்று இன்று வேத மந்திரங்கள் முழங்க குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா நடைபெற்றது. இதில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு கலந்து கொண்டார்.

பின்னர், அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இன்று வரை 2,634 கோவில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளன. இன்று மட்டும் தஞ்சாவூர் மாவட்டம், புதுசத்திரம், காளியம்மன் கோயில், கோவை மாவட்டம், சரவணம்பட்டி, ரத்தினகிரி மருதாசலக்கடவுள் கோயில், தேனி மாவட்டம், போடி நாயக்கனூர், பரமசிவன் கோயில் என 14 கோவில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீதர், சென்னை மண்டல இணை ஆணையர் முல்லை, உதவி ஆணையர் சிவக்குமார், மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் ராமுலு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் முரளி, அப்பாரஞ்சி, இறையன்பர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அனைத்துக்கட்சி கூட்டத்தில் தேமுதிக பங்கேற்கும் பிரேமலதா அறிவிப்பு

தஞ்சாவூர், மார்ச். 3

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், தஞ்சாவூரில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

" தேமுதிகவை பொறுத்தவரையில் தாய் மொழியை காத்து அதேபோல் அனைத்து மொழியையும் காக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு. பல்வேறுவகைகளில் வருங்காலம் சிறக்கும். எனவே அவர் அவர்களுக்கு பிடித்த மொழிகளை படிப்பதில் எந்த தவறும் இல்லை.

அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட கட்சியான எங்களுக்கும் ஒரு வார காலத்திற்கு முன்பே அழைப்பு வந்துவிட்டது. அதனால் உறுதியாக தேமுதிக அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கேற்கும்.

தமிழக முழுவதும் பல்வேறு விதமான சட்டம் ஒழுங்கு பிரச்னைகள் இருக்கிறது. அதற்கு மிக முக்கிய காரணம் டாஸ்மாக், கள்ளச்சாராயம், போதைவஸ்துகள் அதிகரிப்பு, வேலை இல்லாத நிலைமை, பாலியல் வன்கொடுமை என எல்லா பக்கமும் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாக இருக்கிறது. நிச்சயம் இது தடுக்கப்பட வேண்டும். 2026ல் நாங்கள் இடம்பெறும் கூட்டணி 234 தொகுதிகளிலும் வெற்றி பெறும்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஓ.பி.எஸ், டிடிவி தினகரன் மண்குதிரைகளாகி விட்டனர்: திண்டுக்கல் சீனிவாசன் பேச்சு



வேடசந்தூர், மார்ச். 3
திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் ஆத்துமேட்டில் அ.தி.மு.க. சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும், மாநில பொருளாளருமான திண்டுக்கல் சீனிவாசன் கலந்து கொண்டு பேசியதாவது:

தி.மு.க. ஆட்சியில் போலீஸ் உயர் அதிகாரிகளே பாலியல் வழக்கில் சிக்கி சிறையில் இருக்கிறார்கள். ஆனால் ஜெயலலிதா ஆட்சியிலும், எடப்பாடி பழனிசாமி ஆட்சியிலும் குறைந்த அளவே குற்றங்கள் நடைபெற்றது.

திண்டுக்கல் பஸ்நிலையத்தில் கஞ்சா, லாட்டரி விற்பனை அமோகமாக நடைபெறுகிறது. இது முதலமைச்சருக்கு தெரிந்தபோதும் போலீசார் கண்டுகொள்ளக் கூடாது என உத்தரவிட்டுள்ளார்.

ஓ.பி.எஸ். ராமநாதபுரத்திலும், டி.டி.வி.தினகரன் தேனியிலும் பாராளுமன்ற தேர்தலில் மண்ணை கவ்வி உள்ளனர். இதிலிருந்து அவர்களது பலம் வெளிப்பட்டுள்ளது. இருவரும் மண் குதிரைகளாகி விட்டனர். அவர்களை நம்பி செல்பவர்கள் ஆற்றில் மூழ்க வேண்டியதுதான். விரைவில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படும். எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக பதவி ஏற்பார்.

இவ்வாறு அவர் பேசினார்.

# கவர்னர் வருகையை யொட்டி ராமேசுவரத்தில் மீனவர்கள் கஞ்சி காய்ச்சும் போராட்டம்



ராமேசுவரம், மார்ச். 3
தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதல்கள், சிறைபிடிப்பு, விசைப்படகுகள் பறிமுதல் உள்ளிட்ட அத்துமீறல்களை கண்டித்து பல்வேறு கட்ட போராட்டங்கள் நடத்தப் பட்டுள்ளன. இருந்த போதி லும் மீனவர்கள் பிரச்சி னைக்கு தற்போது வரை நிரந்தர தீர்வு மட்டும் எட்டப்படவில்லை.

கடந்த மாதம் 16ந்தேதி ராமேசுவரத்தில் தி.மு.க. சார்பில் கனிமொழி எம்.பி. தலைமையில் மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மீனவர்களை தொடர்ந்து அச்சுறுத்தி வரும் இலங்கை அரசை கண்டிக்காமல் வேடிக்கை பார்க்கும் மத்திய அரசு அதன் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் டெல்லியிலும் போராட்டம் நடத்தப்படும் என்று கனிமொழி எம்.பி. கூறினார்.

இந்தநிலையில் கடந்த வாரம் 2 நாட்களில் ராமேசுவரம் மீனவர்கள் 42 பேரை சிறைபிடித்த இலங்கை கடற்படையினர் அவர்களது 8 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்தனர். கோர்ட்டில் ஆஜர்படுத் தப்பட்ட அவர்கள் வவு னியா, யாழ்ப்பாணம் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தரையில் படுக்க கூட இடமில்லாமல் மிகவும் குறுகிய அறைகளில் அவர்கள் அடைத்து வைக்கப்பட்டு இருப்பதாக தகவல்கள் வந்துள்ளன.

மேலும் சரியான தூக்கம், உணவின்றி தவித்து வருவதாக கிடைத்த தகவல்கள் அவர்களின் குடும்பத்தினரை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. இலங்கை கடற்படையை கண்டித்தும், மத்திய அரசு உடனடியாக மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் கடந்த 24ந்தேதி முதல் கால வரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை தொடங்கினர்.

இதன் காரணமாக ராமேசுவரம் பகுதியில் சுமார் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள், மீன்பிடி தொழில் சார்ந்தவர்கள் நேரடியாகவும், மறைமுக மாகவும் வாழ்வாதாரம் இழந்து தவித்து வருகி றார்கள். தினமும் ரூ.3 கோடி முதல் ரூ.5 கோடி வரையிலும் வர்த்தகம் முடங்கியுள்ளது.

போராட்டத்தின் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் தங்கச்சிமடம் வலசைபகுதி பஸ் நிறுத்தம் எதிரே ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தனர்.

இதில் மீனவர்கள், அவர்களின் குடும்பத்தினர், குழந்தைகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நேற்று காத்திருப்பு போராட்டத்தை தொடங்கிய மீனவர்கள் இரவு, பகலாக கொட்டும் மழையிலும் பந்தலில் போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

மீனவர்கள் பிரச்சினைக்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக கூறி பேச்சுவார்த்தைக்கு கலெக்டர் நேற்று அழைத்திருந்தார். அதில் மீனவர் சங்க பிரதிநிதிகள் 5 பேர் கலந்து கொண்டனர். அப்போது கலெக்டர் பேசுகையில், உங்கள் கோரிக்கைகள் குறித்து தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். எனவே காத்திருப்பு போராட்டத்தை கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆனால் அதனை ஏற்க மறுத்த மீனவர்கள் கோரிக்கைகள் நிறைவேற வேண்டும், மத்திய மந்திரி நேரில் வந்து உறுதி அளித்தால் மட்டுமே போராட்டத்தை கைவிடுவோம் என்று உறுதிபட தெரிவித்தனர்.

அத்துடன் 6 மாதம், ஒரு ஆண்டு சிறை தண்டனையுடன் பல லட்சம் அபராதம் விதிக்கப்படும் போது அவற்றை செலுத்த முடியாத மீனவர்கள் தொடர்ந்து சிறை தண்டனை அனுபவித்து வருகிறார்கள்.

எனவே இலங்கை கோர்ட்டு விதிக்கும் அபராத தொகையை தமிழக அரசு செலுத்த வேண்டும், 87 விசைப்படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்று கூறினர்.

இந்தநிலையில் தங்கச்சி மடத்தில் இன்று மூன்றாவது நாளாக காத்திருப்பு போராட்டம் தொடர்கிறது. தமிழக மீனவர்களை கைது செய்வது, அவர்களது படகுகளை நாட்டுடைமை ஆக்குவது, ஏலத்தில் விட்டு படகுகளை உடைப்பது, அதில் இருக்கும் இரும்புகளை ஏற்றுமதி செய்வது, இலங்கை சிறையில் உள்ள மீனவர்களுக்கு அதிகப்படியான அபதாரங்களை விதித்து இலங்கை அரசு தமிழக மீனவர்களை வஞ்சித்து வருவது, அதை கண்டு கொள்ளாத மத்திய அரசை கண்டித்து போராட்டம் தொடரும் என்று மீனவர்கள் உறுதிபட தெரிவித்தனர்.

போராட்டத்தில் அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இன்று கஞ்சி காய்ச்சும் போராட்டமும் நடைபெறும் என்று மீனவர்கள் அறிவித்துள்ளனர். இந்த சூழ்நிலையில் இன்று தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகவும், கோவிலில் சுவாமி தரிசனம் செய்யவும் ராமேசுவரம் வருகை தருகிறார். செம்மமடம் பகுதியில் தனியார் காப்பகத்தை புதிய கட்டிடத்தை திறந்து வைக்கிறார். இதற்கிடையே மீனவர்கள் போராட்டம் நாளுக்கு நாள் வலுத்து வருவதால் ராமேசுவரத்தில் பரபரப்பான சூழல் நிலவுகி றது.

அதனால் போராட்டம் நடைபெறும் இடத்தில் இரண்டடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

# மாணவிக்கு பாலியல் தொல்லை.. த.வெ.க நிர்வாகி போக்சோ வழக்கில் கைது.. 14 நாட்கள் நீதிமன்ற காவலில் அடைப்பு



அரூர், மார்ச். 3
தருமபுரி மாவட்டம் அரூர் அருகே உள்ள கிராமத்தை சேர்ந்த 16 வயது சிறுமி கடந்த சில நாட்களுக்கு முன்பு வீட்டின் வெளியில் உள்ள அறையில் கட்டிலில் தூங்கி கொண்டிருந்தார். அப்போது சிறுமியின் சித்தப்பா உறவு முறையான தொழிலாளி சுதாகர்(வயது 45) என்பவர் அங்கு வந்தார்.

அப்போது அவர் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக கூறப்படுகிறது. இதனால் அதிர்ச்சி அடைந்த சிறுமி கூச்சலிட்டார். இதனால் சுதாகர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.


இதுகுறித்து சிறுமி சைல்டுலைன் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு புகார் தெரிவித்தார். இதுகுறித்து அரூர் அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த சம்பவம் குறித்து அரூர் அனைத்து மகளிர் போலீசார் சுதாகர் மீது போக்சோ வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இதையடுத்து சுதாகரை கைது செய்த போலீசார் தருமபுரி போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அப்போது, சுதாகருக்கு 14 நாட்கள் நீதிமன்ற காவல் விதிக்கப்பட்டதை அடுத்து சிறையில் அடைக்கப்பட்டார்.

கைதான சுதாகர் தமிழக வெற்றிக்கழகத்தில் அரூர் பகுதி நிர்வாகியாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வீட்டில் தூங்கிகொண்டிருந்த சிறுமிக்கு தொழிலாளி பாலியல் தொந்தரவு கொடுத்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் தொடர் மழை: குற்றாலத்தில் 2வது நாளாக குளிக்க தடை



தென்காசி, மார்ச். 3
தென்காசி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் முதல் இன்று காலை வரை பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக மாவட்டத்திலுள்ள பல்வேறு நீர்நிலைகள் மற்றும் நீர்வீழ்ச்சிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், தென்காசி மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலா தளங்களில் ஒன்றான குற்றாலம் பகுதியில் உள்ள அனைத்து அருவிகளிலும் நேற்று வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட நிலையில், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேற்று சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

நேற்று மாலையில் மட்டும் புலி அருவியில் தண்ணீர் வரத்து சீரானதை அடுத்து அங்கு மட்டும் சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இரவு தொடர்ந்து பெய்த மழையினால் மீண்டும் அனைத்து அருவிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் புலி அருவியிலும் இன்று காலையில் தடை விதிக்கப்பட்டுள்ளது

அதாவது, குற்றாலம் பகுதியில் உள்ள குற்றாலம் மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவி உள்ளிட்ட அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க 2வது நாளாக இன்றும் தடை நீட்டிக்கப்பட்டுள்ளது.

அருவிகளில் தண்ணீர் வரத்து சற்று அதிகமாக காணப்பட்டு வருவதன் காரணமாக பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த தடையானது விதிக்கப்பட்டுள்ளதாகவும், மழை குறைந்து தண்ணீர் வரத்து குறையும் பட்சத்தில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க உடனடியாக அனுமதி வழங்கப்படும் எனவும் போலீசார் தெரிவித்தனர்.

# 4 எம்.எல்.ஏ.க்கள், 2 எம்.பி.க்கள் இருந்தும் கொடி கூட ஏற்ற முடியவில்லை திருமாவளவன் ஆதங்கம்

சென்னை, மார்ச்.3
சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் நடைபெற்ற தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டு செயல் திட்டம் சட்டம் & விதிகள் 2024! நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல், வலுப்படுத்துதல் சமூக அமைப்புகள் மாநாட்டில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் கலந்துகொண்டார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

★ 4 எம்.எல்.ஏ.க்கள், 2 எம்.பி.க்கள் இருந்தும் கொடி கூட ஏற்ற முடியவில்லை.

★ அதிகாரத்தில் இருப்பவர்களோடு இணைந்து கோரிக்கையை நிறைவேற்றி கொள்வதே வாய்ப்பாக உள்ளது.

★ அதிகாரிகள் நல்ல பதிலை கூறினாலும் ஒன்றும் நடப்பதில்லை.

★ விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் கொடியேற்றும்போது தான் அதிகாரிகள் சட்டம் பேசுகின்றனர்.

★ அதிகாரிகளை செயல்பட வைக்க அரசியல் ரீதியாக வலிமைபெற வேண்டும். ★ எளியமக்களுக்கான திட்டங்களை அமல்படுத்துவதில் பெரிய போராட்டம் உள்ளது.

★ அரசியலமைப்பு சட்டத்தில் சொல்லப்பட்டு இருக்கும் அனைத்தும் நடைமுறைக்கு வந்தாலே இந்தியா இந்நேரம் ஒரு சமத்துவம் உள்ள தேசமாக எப்போதோ பரிணாமம் அடைந்திருக்கும். ஆனால் அதுவே இன்னும் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை என்றார்.

# அனைத்துக்கட்சி கூட்டத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் பங்கேற்காது ஜி.கே.வாசன் அறிவிப்பு

சென்னை, மார்ச். 3
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வருகிற 5ந்தேதி நடைபெற உள்ள அனைத்துக்கட்சி கூட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை என்று பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை நேற்று தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில், பா.ஜ.க.வைத் தொடர்ந்து அதன் கூட்டணிக் கட்சியான தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியும் தமிழ்நாடு அரசின் அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என அறிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

தமிழக அரசு கூட்டியிருக்கும் அனைத்துக் கட்சி கூட்டத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் (மூ) பங்கேற்காது.

மும்மொழிக் கொள்கை மற்றும் நீட் நுழைவுத் தேர்வு சம்பந்தமான மத்திய அரசின் கல்வி நிலைப்பாட்டிற்கு பெரும்பாலான பெற்றோர்களும், மாணவர்களும் ஆதரவாகவே இருக்கிறர்கள்.

தொகுதி மறுசீரமைப்பு குறித்து மத்திய அரசின் எந்த அதிகார பூர்வமான அறிவிப்பும் வராத நிலையில், தமிழ்நாட்டிற்கு தொகுதிகள் குறையும் என்று கூறுவது உண்மை நிலைக்கு எதிரானது.

கடந்த வாரம் 25.02.2025 தமிழகத்திற்கு வருகை தந்த மத்திய உள்துறை அமைச்சர், தொகுதி மறுசீரமைப்பில் எந்த நிலைப்பாட்டையும் மத்திய அரசு இதுவரை எடுக்கவில்லை என்றும் அப்படி இருந்தாலும் கூட தமிழகத்திற்கு பாராளுமன்ற தொகுதிகள் கூடுமே தவிர குறையாது என்றும் தெளிவுப்பட கூறியிருக்கிறார்கள்.

தனிழகத்தில் தொடர்ந்து வளர்ந்துகொண்டு இருக்கும் பல்வேறு தீர்க்கப்படாத பிரச்சனைகள் இருக்கும் பொழுது, அதையெல்லாம் மக்களிடம் இருந்து திசைத் திருப்பவே இக்கூட்டம் நடைபெறுவதாக தமிழ் மாநில காங்கிரஸ் கருதுகிறது.

எனவே வருகிற 5ஆம் தேதி நடைபெறும் அனைத்துக் கட்சி கூட்டத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் (மூ) பங்கேற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆட்சி, அதிகாரத்தை வைத்து பயமுறுத்தும் செயல் விஜய்யிடம் பலிக்காது நடிகர் சௌந்தரராஜா



மதுரை, மார்ச். 3
மதுரை ஒத்தக்கடை நரசிங்கம் பகுதியில் யானை மலை அடிவாரத்தில் குடை வரை கோவிலாக அமைந்துள்ள நரசிங்கம் பெருமாள் கோவிலில் தமிழக வெற்றிக்கழக ஆதரவாளரும், நடிகரும், தனியார் அறக்கட்டளை தலைருமான சௌந்தர ராஜா தனது குடும்பத்தினருடன் சாமி தரிசனம் செய்தார்.

அப்போது அவர் தமிழக வெற்றிக் கழகத்தின் பெயரிலும், அதன் தலைவரும் நடிகருமான விஜய் பெயரிலும் அர்ச்சனை செய்து வழிபட்டார். மேலும் கோவிலுக்கு வருகை தந்த பக்தர்கள் அவருடன் செல்பி எடுத்துக் கொண்டனர். அப்போது இதே மகிழ்ச்சியுடன் எப்போதும் இருக்கவேண்டும் என்றும், வருகின்ற 2026ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் விஜய்க்கு வாக்களிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். இதையடுத்து பேசிய அவர் கூறியதாவது:

மக்களுக்கு சந்தோஷத்தை கொடுத்து மண்ணுக்கு தேவையான ஒரு ஆட்சியை கொடுப்பதற்கான வழியை தமிழக வெற்றிக் தழகத்தின் தலைவர் விஜய் கையில் எடுத்திருக்கிறார். பேசும் பொருள்

ஆனால் தான் அது கழகம், கலகம் வந்தால்தான் தீர்வு கிடைக்கும். எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் கூறிய குறைகளை ஆட்சியாளர்கள் தாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் இதுவரை நிறைவேற்றவில்லை. மாற்றம் வேண்டும் என்று நினைப்பவர்கள், நேர்மையாக அரசியல் செய்ய விரும்புபவர்கள் விஜய்யை விரும்புகிறார்க ள்.

தேர்தலுக்கு இன்னும் காலம், நேரம் இருக்கிறது. கூட்டணி கட்சியினர் சீட்டுக்காக காத்திருக்கிறார்கள், சீட்டு கிடைக்கவில்லை என்றால் நல்லவர்கள் எங்களை தேடி வருவார்கள். அரசியலை பொறுத்த வரை நேர்மையான விமர்சனத்திற்கு பதில் சொல்லலாம் என்பதற்காக வாய்க்கு வந்ததெல்லாம் பேசுகிறார்கள். தவறு செய்பவர்களை சுட்டிக்காட்டுவதற்காக பாசிசமும் பாயாசமும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

நாங்கள் இதுவரை ஆட்சிக்கு வரவில்லை. எங்கள் மீது குற்றம் சுமத்த வேண்டிய காரணம் என்ன? அச்சுறுத்துவீர்கள், அவமானப்படுத்துவீர்கள், ஆட்சி அதிகாரத்தை வைத்து பயமுறுத்துவீர்கள். இதெல்லாம் விஜய் அண்ணனிடம் பலிக்காது.


அவரவர்கள் அவர்கள் கட்சியை வளர்ப்பதற்கு அடுத்தவர்களை வீழ்த்துவதற்கான வேலையை பார்க்கிறார்கள். இந்த கட்சிதான் மீண்டும் மீண்டும் ஆள வேண்டுமா, அ.தி.மு.க., பா.ஜ.க., தி.மு.க., காங்கிரஸ் தவிர வேறு கட்சிகளே இல்லையா? மக்களுக்கான பணியை செய்தால் உங்களை விமர்சனம் வேண்டிய அவசியம் இல்லை. பா.ஜ.க., அ.தி.மு.க. என மக்களுக்கு நல்லது செய்தால் ஆட்சி பிடிப்பதற்கு எதற்கு போட்டி வருகிறது? மக்கள் யாராவது நிம்மதியாக இருக்கிறார்களா?

மதுரையில் ஒத்தக்கடை நரசிங்கம்பட்டியில் பாறைகள் உடைக்கப்பட்டு இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டது, அதற்கு தீர்வு கிடைத்ததா? தீர்க்க வேண்டிய, திருத்தப்பட வேண்டிய விஷயம் தமிழ்நாட்டில் நிறைய இருக்கு. கூட்டணி என்பது வியூகம் தான், அவரவர் கருத்தை கூறுவார்கள். இது அனைத்திற்கும் இப்போது பதில் சொல்வது பொருத்தமாகாது.

எத்தனை ஆண்டு காலமாக என் தாய் ஒரே கட்சிக்குதான் சாகும் வரை வாக்களிப்பேன் எனக் கூறிவந்தார். தற்போது முதல் முறையாக தமிழக வெற்றிக் கழகத்திற்கு வாக்களிப்பதாக கூறியிருக்கிறார். இது ஒரு சான்று, இதேபோல் ஓராயிரம் சான்று உள்ளது. தமிழக வெற்றி கழகத்தை எதிர்நோக்கி மக்கள் காத்திருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# நடிகர் வடிவேலு மேடை ஏறிய தி.மு.க. ஊத்திக்க போகிறது முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு



மதுரை, மார்ச். 3
தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் அ.தி.மு.க. சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட புதூர் பேருந்து நிலையம் பகுதியில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் பொதுக்கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசியதாவது:

கலைஞர் இருந்த காலத்தில் கடந்த 2006ம் ஆண்டு தி.மு.க.விற்காக குரல் கொடுத்தவர் வைகை புயல் நடிகர்வடிவேலு. அப்போது தி.மு.க. வெற்றிபெறவில்லை. வெள்ளைக் கொடி ஏந்திய புலிகேசி வடிவேலு, தி.மு.க. பக்கம் போய்விட்டார்.

ஒருபுறம் வடிவேலு, மறுபுறம் குஷ்பு என்று பிரசாரம் செய்தார்கள். ஆனால் அந்த தேர்தலில் தி.மு.க. தோல்வியை சந்தித்தது. மீண்டும் நடிகர் வடிவேலு மேடை ஏறிய தி.மு.க. ஊத்திக்கப்போகிறது. இது நூற்றுக்கு நூறு உண்மை.

ஸ்டாலின் தான் வராரு, விடியல் தரப்போறாருன்னு பாடல் போட்டார்கள். ஆனால் இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளில் கூட அந்தப் பாட்டை போடவில்லை. ஏனென்றால் மக்கள் அனைவரும் கொதித்துப் போய் உள்ளார்கள். மின் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, வீட்டு வரி உயர்வு என பல்வேறு வரி உயர்வுகளை விதித்த இந்த தி.மு.க. ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். அதை மக்களாகிய நீங்கள் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நடிகர் வடிவேலு குறித்து செல்லூர் ராஜூ பேசியது, சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு சென்னையில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற விழாவில் பேசிய நடிகர் வடிவேலு, கலைஞரும், அவரது மகன் மு.க.ஸ்டாலினும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளனர். அதிலும் குறிப்பாக சொன்னதை விட சொல்லாதது ஏராளமானவற்றை செய்துகொடுத்துள்ளனர் என்று பேசியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 413 கனஅடியாக அதிகரிப்பு

சேலம், மார்ச். 3

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தும், குறைந்தும் வந்து கொண்டு இருக்கிறது.

இந்த நிலையில் கடந்த சிலநாட்களாகநீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் அணைக்குதண்ணீர் வரத்து குறைந்து காணப்பட்டது. இதற்கிடையே தமிழக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பரவலாக பெய்த மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது.



நேற்று அணைக்கு வினாடிக்கு 252 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்த நிலையில் இன்று வினாடிக்கு 413 கனஅடியாக அதிகரித்துள்ளது. மேலும் அணையின் நீர் மட்டமும் 109.59 அடியாக உள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. தற்போது அணையில் 77.82 டி.எம்.சி.தண்ணீர் இருப்பு உள்ளது.

# தொடர் கனமழை: ஸ்ரீவைகுண்டம் தற்காலிக பாலம் உடைந்து போக்குவரத்து துண்டிப்பு

செய்துங்கநல்லூர், மார்ச். 3

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளான கருங்குளம், செய்துங்கநல்லூர், புதுக்குடி உள்பட பல்வேறு பகுதிகளில் நேற்று இரவு முதல் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

ஸ்ரீவைகுண்டம் அருகே செய்துங்கநல்லூர் பகுதியில் உள்ள சத்தக்காரன் பட்டியில் 100க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளது. இப்பகுதியில் சில மாதங்களுக்கு முன்பு பாலம் அமைக்கும் பணிகள் தொடங்கியது. அந்த சமயத்தில் ஊருக்குள் பொதுமக்கள் சென்று வர தற்காலிகமாக குழாய்கள் மூலம் பாதைகள் அமைக்கப்பட்டு போக்குவரத்து நடந்து வந்தது.



இந்த நிலையில் நேற்று இரவு முதல் பெய்து வந்த தொடர் மழையால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. மேலும் பாலத்திற்காக தோண்டப்பட்டு குழிகள் முழுவதும் மழை நீர் தேங்கி உள்ளது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் காலை முதல் வெளியே வர முடியாமல் தவித்து வருகின்றனர். உடனடியாக இந்த பாலத்தை சரி செய்து போக்குவரத்து நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அந்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கிடையில் கருங்குளத்தில் இருந்து மூலைக்கரைப்பட்டி செல்லும் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலையில் நேற்று இரவு முதல் பெய்த தொடர் மழையால் முழங்கால் அளவுக்கு தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இதனால் அந்த வழியாக செல்லும் பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

மேலும் தொடர்ந்து மழை நீர் பெருக்கெடுத்து ஓடுவதால் சாலையில் அரிப்பு ஏற்படுகிறது. இதனால் சாலை சேதமடைவதுடன் அந்த வழியாக செல்லும்வாகனங்கள்விபத்தில் சிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே அந்த பகுதியில் தடுப்பு வேலிகள் அமைக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# Chappal தான் போடாமல் இருக்கிறேன், ஜெயிலுக்கு செல்லவில்லை: அண்ணாமலை

ராமநாதபுரம், மார்ச். 3

ராமநாதபுரம் மாவட்டம் கழுகூரணி தனியார் மகாலில் பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் மாவட்ட தலைவர் ஆர். தரணி முருகேசன் இல்ல திருமண விழாவில் பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை கலந்து கொண்டு தலைமை தாங்கி திருமணத்தை நடத்தி வைத்தார். அதன்பின் செய்தியாளர்களை சந்தித்த அண்ணாமலை கூறியதாவது:

அமைச்சர் சேகர்பாபு என்னை கர்நாடகா டுப் போலீஸ் என விமர்சித்துள்ளார். அமைச்சர் சேகர்பாபு அந்தத் துறைக்கு சம்பந்தமே இல்லாத நபர். வேண்டுமென்றால் அமைச்சர், நான் வேலை பார்த்தது தொடர்பாக சோதனை செய்து கொள்ளட்டும். அதுமட்டுமல்லாது பொழுது விடிந்தால் போதும் பா.ஜ.க.வினரை விமர்சிப்பதே தி.மு.க.வினரின் தொழிலாக உள்ளது.



தி.மு.க. சார்பில் அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. திருமணத்திற்கு செல்கிறோம் என்றால் திருமணத்திற்கு தான் செல்கிறோம் என தெரிந்து செல்வோம். ஆனால் எதற்காக அனைத்து கட்சி கூட்டம் என தெரியாமல் அதில் எப்படி கலந்து கொள்வது? எந்த விதத்திலும் தொகுதி மறுசீரமைப்பில் தமிழகத்திற்கான தொகுதி எண்ணிக்கை குறையாது என பிரதமர் மோடி, மத்திய மந்திரிகள் திட்டவட்டமாக தெரிவித்தும் கூட விதண்டா வாதமாக பேசி வருவது அவர்களின் வாடிக்கை. அப்படி இருக்க அந்த கூட்டத்தில் எப்படி கலந்து கொள்வது?

திராவிட மாடலை அகற்றும் வரை காலில் செருப்பு அணியப் போவதில்லை என சபதம் எடுத்துள்ளேன். செந்தில் பாலாஜி குறித்த விமர்சனம் என்பது காலில் செருப்பு போடாமல் நடக்கலாம் அதில் தவறில்லை, ஜெயிலுக்குதான் போகக்கூடாது.

மேலும் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அண்ணாமலையே இரு மொழிக் கொள்கையில்தான் படித்ததாக கூறியுள்ளார். நான் மும்மொழி கொள்கையில் தான் படித்தேன். விருப்பமொழியாக தமிழை தேர்வு செய்தேன். படிக்காத நபர்களுக்கெல்லாம் இதைப்பற்றி என்ன தெரியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் உள்பட முக்கிய பிரபலங்கள் த.வெ.க.வில் இணையும் விழா ஏற்பாடுகள் தீவிரம்

சென்னை, மார்ச். 3

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு அனைத்து கட்சிகளும் ஆயத்தமாகி வருகின்றன.

தி.மு.க. மற்றும் அ.தி.மு.க, பா.ஜ.க., ஆகிய கட்சிகள் தனித்தனியே கூட்டணி அமைத்துள்ள நிலையில் நடிகர் விஜய் தனித்து போட்டியிட உள்ளார். இதற்காகதமிழக வெற்றிக் கழகத்தை பலப்படுத்த திட்டமிட்டுள்ள அவர் அதற்கான வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு இருக்கிறார்.

பூத் கமிட்டிகளை வலுவாக்கி அதன் மூலமாக தமிழகம் முழுவதும் அனைத்து இடங்களிலுமே கட்சியின் கட்டமைப்பை வலுவாக்குவதற்கு விஜய் வியூகம் வகுத்து செயல்பட்டு வருகிறார். கடந்த தேர்தலில் தி.மு.க.வுக்கு வெற்றி பெற வியூகம் வகுத்து கொடுத்த பிரபல அரசியல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் விஜய் கட்சியில் ஆலோசகராக நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார்.



விஜய் கட்சியில் அ.தி.மு.க.,பா.ஜ.க., ஆகிய கட்சிகளில் இருந்து முக்கிய பிரபலங்கள் சேருவதற்கு விருப்பம் தெரிவித்து வருகிறார்கள். காங்கிரசில் இருந்து விலகி பா.ஜ.க.வில் இணைந்து செயல்பட்டு வரும் பிரபல பெண் பிரமுகரும் தமிழக வெற்றி கழகத்தில் விரைவில் சேருவார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதேபோன்று அ.தி.மு.க. வில் முன்னாள் அமைச்சர் ஒருவரும் த.வெ.க.வில்சேருவதற்கு முடிவு செய்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இது தவிர பாரதிய ஜனதா கட்சியில் உள்ள இரண்டு முக்கிய பிரபலங்களும் விரைவில் விஜய் கட்சியில் சேருவதற்கான வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

இது போன்று தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் முக்கிய அரசியல் கட்சிகளில்மாவட்ட அளவில் பணிபுரிந்து வருபவர்களும் தமிழக வெற்றிக் கழகத்தில் சேர்வதற்கு ஆயத்தமாகி வருகிறார்கள். இப்படி மாநிலம் முழுவதிலுமே இருந்து பல்லாயிரக் கணக்கானோர் விஜய் கட்சியில் இணைந்து சட்டமன்றத் தேர்தலை சந்திப்பதற்கு தயாராகி வருவதால் அதனை பிரம்மாண்டமான விழாவாக நடத்துவதற்கு கட்சி நிர்வாகிகள்திட்டமிட்டுள்ளனர்.

இந்த இணைப்பு விழாவை எப்போது எங்கு வைத்து நடத்தலாம் என்பது பற்றி தமிழக வெற்றிக் கழகத்தின் முன்னணி நிர்வாகிகள் ஆலோசனை நடத்தி வருகிறார்கள். பொதுவான ஒரு இடத்தில் வைத்து தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் எளிதாக வந்து செல்லும் வகையில் இணைப்பு விழாவை நடத்துவதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர். அதற்கான தேதி மற்றும் விழா நடைபெறும் இடங்கள் ஆகியவை விரைவில் அறிவிக்கப்பட்ட உள்ளது. இதன்மூலம் சட்டமன்ற தேர்தலை சந்தித்து அதில் வெற்றி பெறுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விஜய் தீவிரமாக மேற்கொண்டு வருவதாக தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# திருமாண 2 மாதத்தில் மனைவியை பழிதீர்க்க கணவன் போட்ட பிளான்... கடைசியில் நடந்த டுவிட்ஸ்

சிதம்பரம், மார்ச். 3

கடலூர் மாவட்டம், புதுச்சத்திரம் அருகே உள்ள கருவேப்பிலம்பாடியை சேர்ந்தவர் சுந்தரமூர்த்தி. இவரது மகன் கலையரசன் (வயது30). இவரது மனைவி ஷாலினி (26) இவர்களுக்கு கடந்த ஜனவரி மாதம் 26ந் தேதி திருமணம் நடைபெற்றது.

இந்த நிலையில் கலையரசன் விஷம் குடித்த நிலையில் குறிஞ்சிப்பாடி ஆரம்ப சுகாதாரா நிலையத்தில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேல் சிகிச்சைக்காக புதுவை ஜிப்மரில் அனுமதிக்கப் பட்டுள்ளார். அங்கு அவருக்குதீவிரசிகிச்சைஅளிக்கப்பட்டு வருகிறது.





இது குறித்து புதுச்சத்திரம் போலீசாரிடம் கலையரசன் அளித்த வாக்குமூலத்தில் மனைவி ஷாலினிக்கு என்னை பிடிக்கவில்லை அவர் வேறொரு வாலிபரை காதலித்து வந்தார். ஷாலினி பெற்றோர் வற்புறுத்தலின் பேரிலே அவர் தன்னை திருமணம் செய்தார். வாலிபர் மீது உள்ள காதலால் குளிர்பானத்தில் பூச்சி மருந்து கலந்து தனக்கு கொடுத்து விட்டார் என கூறியிருந்தார்.

ஆனால் போலீசாரின் விசாரணையில் கலையரசன் தனக்கு தானே குளிர் பானத்தில் பூச்சி மருத்து கலந்து குடித்தது தெரிய வந்தது.

கடந்த மாதம் 13ந் கலையரசனுக்கு ஷாலினிக்கு தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் கோபம் அடைந்த ஷாலினி கோபித்து கொண்டு தனது தாய் வீட்டிற்கு சென்று விட்டார். பின்னர் அவரை கடந்த 16ந் தேதி கலையரசன் சமரசம் செய்து அழைத்து வந்துள்ளார்.

தன்னை அசிங்கபடுத்திய மனைவியை பழி வாங்கவே கலையரசன் தனக்கு தானே குளிர்பானத்தில் விஷம் கலந்து குடித்ததும், கலையரசன் தனது நண்பர்களிடம் மனைவியை கண்டிப்பாக பழிவாங்க வேண்டும் என கூறியதும் போலீஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக போலீசார் கலையரசன் மற்றும் அவரது மனைவியிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவம் புதுச்சத்திரம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மத்திய அரசை கண்டித்து பொதுக்கூட்டம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, மார்ச். 3

மத்திய அரசை கண்டித்து தி.மு.க. இளைஞரணி சார்பில் சட்டமன்ற தொகுதித்தோறும் பொதுக்கூட்டம் நடைபெறும் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

கழக இளைஞர் அணியின் மாவட்டமாநகரமாநிலஅமைப்பாளர்,துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக் கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர்.



மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72வது பிறந்தநாள்காணும் கழகத்தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத்தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்நாடு போராடும்!

தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சீமான் பாலியல் வழக்கில் தி.மு.க. தலையீடா? அமைச்சர் ரகுபதி விளக்கம்

புதுக்கோட்டை, மார்ச். 3

புதுக்கோட்டையில் சீமான் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி கூறியதாவது:

★ சீமானை சமாளிப்பது எங்களுக்கு தூசு மாதிரி.

★ சீமான் பாலியல் வழக்கில் தி.மு.க. தலையிடவில்லை

★ உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் பாலியல் வழக்கு நடைபெற்று வருகிறது. ★ சீமான் பாலியல் வழக்கில் தி.மு.க.வின் பின்புலம்எதுவும்இல்லை என்றார்.

# முதுகுளத்தூர் அருகே தர்மமுனீஸ்வரர் கோவில் பாரிவேட்டை: ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

முதுகுளத்தூர், மார்ச். 3

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுகா கீழச்சாக்குளம்கிராமத்தில் கடலாடி முதுகுளத்தூர் மெயின்ரோட்டில் அமைந்துள்ளது தர்ம முனீஸ்வரர் ஆலயம். இங்கு ஒவ்வொரு ஆண்டும் மாசி களரி விழாவையொட்டி பாரிவேட்டை திருவிழா மிகச்சிறப்பாகநடைபெறுவது வழக்கம்.

பாரி வேட்டை திருவிழா விற்காக நூற்றுக்கணக்கான ஆடுகள் நேர்த்திக் கடனாக கோவிலுக்கு செலுத்தப்படும். ஆடுகள் குட்டி போடும் போதே இது முனியனுக்கு என்று சொல்லி நேர்ந்து விடும் பழக்கம் இப்பகுதியில் உள்ளது.

மேலும், கீழச்சாக் குளம் கிராமத்தின் சார்பில் தலைகட்டுவரியாக 2 ஆயிரம் வசூல் செய்து ஒவ்வொரு ஆண்டும் பொது அன்ன தானம் நடைபெறுகிறது. இதற்கான அனைத்து செலவுகளையும் கீழச்சிக்குளம் கிராம மக்களே ஏற்றுக் கொள்கின்றனர்.



2 ஆண்டுக்கு ஒருமுறை பாரிவேட்டை திருவிழா நடைபெற்று வருகிறது. அதன்படி, இந்தாண்டு தர்ம முனீஸ்வரர் கோவிலில் பாரிவேட்டை திருவிழா நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள்கலந்து கொண்டனர்.

கீழச்சாக்குளம் தர்ம முனீஸ்வரர் ஆலய பாரி வேட்டை திருவிழாவிற்கு தமிழகம் மட்டுமன்றி, இந்தியா முழுவதும் இருந்து பக்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான பொது அன்னதான விருந்து இந்தாண்டு சிறப்பாக நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஜாதி பேதம் பாராமல் கலந்து கொண்டு கறிவிருந்து சாப்பிட்டு மகிழ்ந்தனர். பல நூறு ஆண்டுகளாக இந்த ஆட்டுக்கறி விருந்து நடை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் கோவிலுக்குச் சொந்தமான பொருட்களை இப்பகுதி மக்கள் உபயோகப் படுத்துவதில்லை. கோவில் பொருட்கள் அனைத்தும் தர்ம முனீஸ்வரருக்கு சொந்தம் என இப்பகுதி மக்கள் கருதுவதால், கோவில் ஊரணியைச் சுற்றியுள்ள மரங்களில் உள்ள இலை தழைகளைக் கூட தங்களது ஆடு, மாடுகளுக்கு அளிக்க மாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வத்தலகுண்டு கிழக்கு ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் நீக்கம் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, மார்ச். 3

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கழகத்தின் கொள்கைகுறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும்; கழகத்தின் சட்ட திட்டங்களுக்கு மாறுபட்டு, கழகத்தின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்து கொண்டதாலும்; கழகத்தின் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில், கழகக் கட்டுப்பாட்டை மீறி கழகத்திற்கு களங்கமும் அவப் பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினாலும், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், வத்தலகுண்டு கிழக்கு ஒன்றியக் கழகச்செயலாளர்பொறுப்பில் இருக்கும் ஆர். மோகன் இன்று முதல் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார்.



கழக உடன்பிறப்புகள் யாரும் இவருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தேனியில் ஜெயலலிதா பிறந்தநாள் பொதுக்கூட்டம் எடப்பாடி பழனிசாமி சிறப்புரை

ஆண்டிபட்டி, மார்ச். 3

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளை முன்னிட்டு தேனி அருகே மதுராபுரியில் இன்று மாலை முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இதற்காக அவர் சேலத்தில் இருந்து தேனிக்கு வருகிறார். அவருக்கு திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்ட எல்லையில் உற்சாக வரவேற்பு அளிக்க அ.தி.மு.க.வினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

பொதுக்கூட்டத்திற்கு 50,000க்கும் மேற்பட்ட அ.தி.மு.க. தொண்டர்களை திரட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் பொதுக்கூட்டத்தையொட்டி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிவபிரசாத் மேற்பார்வையில் 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் ஆண்டிபட்டியில் பொதுமக்களிடம் ஆதரவு திரட்டுவதற்காக வந்த முன்னாள் அமைச்சர் உதயகுமார் எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

மேலும் அ.தி.மு.க. தேனி மாவட்ட செயலாளர்கள் முருக்கோடை ராமர், ஜக்கையன், ஆண்டிபட்டி ஒன்றிய செயலாளர்கள் லோகிராஜன், வரதராஜன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகளுடன் ஆண்டிபட்டி பஸ் நிலையம் வழியாக ஊர்வலமாக சென்று பொதுமக்களுக்கு துண்டு பிரசுரம் வழங்கி பொதுக் கூட்டத்திற்கு ஆதரவு திரட்டினர். ஆண்டிபட்டி பழைய முருகன் தியேட்டர் அருகில் ஊர்வலத்தை நிறைவு செய்தனர். இந்நிகழ்ச்சியில் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பொதுத்தேர்வு எழுதும் மாணவர்கள் சாதனை படைக்க வேண்டும்! அன்புமணி ராமதாஸ்




சென்னை, மார்ச். 3

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நாளை மார்ச் 3ஆம் நாள் திங்கள்கிழமை தொடங்கும் பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வுகளை தமிழகம் மற்றும் புதுவையில் அமைக்கப்பட்டுள்ள 3316 மையங்களில் எழுதும் 8.21 லட்சம் மாணவ, மாணவியருக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அனைவரும் இத்தேர்வில் வெற்றி பெறவும், சாதனை படைக்கவும் வேண்டும் என்பது தான் எனது விருப்பம் ஆகும்.

மாணவர்களின் வாழ்க்கையில் 12 ஆம் வகுப்புப் பொதுத்தேர்வுகள் மிகவும் முக்கியமானவை ஆகும். மாணவர்களின் எதிர்காலம் என்னவாக இருக்கும் என்பதை இந்தத் தேர்வுகள் தான் தீர்மானிக்கின்றன. இதைக்கருத்தில்கொண்டு மாணவச் செல்வங்கள் எந்த பதட்டமும், பரபரப்பும் இல்லாமல் கவனமாக படித்து 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்களை பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன் என கூறியுள்ளார்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 1200 கனஅடியாக அதிகரிப்பு



தருமபுரி, மார்ச். 3

கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து கடந்த ஒரு வாரமாக குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 1000 கனஅடி வந்தது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பலத்த மழை பெய்துள்ளது. இதனால் இன்று காலை 8 மணி நிலவரப்படி 1200 கன அடியாக தண்ணீர் அதிகரித்து வந்தது.

மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் பரிசல் பயணம் மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர்.

மேலும் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் பாறைகளுக்கு நடுவே விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர்.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# தாம்பரத்தில் போக்குவரத்து நெரிசலை குறைக்க வரும் நாளை முதல் புதிய நடைமுறை



சென்னை, மார்ச். 3

தமிழ்நாடு அரசு போக்குவரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தாம்பரத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தாம்பரம் மாநகர போக்குவரத்துக் காவல் துறை வழங்கியுள்ள பரிந்துரையின்படி தமிழகத்தின் தென்மாவட்டங்களிலிருந்து செங்கல்பட்டு, திண்டிவனம் வழியாக தாம்பரம் வரை இயக்கப்பட்டு வந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் அனைத்தும் 04.03.2025 செவ்வாய்கிழமை முதல் சென்னை கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் வரை இயக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திலுருந்து சென்னையின் பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் பயணிகளின் நலன் கருதி மா.போ. கழகத்தில் தற்போது 80 வழித்தடங்களில் 589 பேருந்துகள் 3795 பயணநடைகள் இயக்கப்பட்டு வருவதுடன் கூடுதலாக 104 பேருந்துகள் 816 பயணநடைகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயணிகள் மாநகர போக்குவரத்துசேவையை பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# ஜெயக்குமாரின் ஆசை நிறைவேறாது திருமாவளவன்



சென்னை, மார்ச். 3

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் செய்தியாளர்களை சந்தித்த விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் கூறியதாவது:

★ ஆங்கிலம் மற்றும் தாய்மொழி என்ற இரு மொழிக்கொள்கை இந்தியா முழுவதும் போதுமானது.

★ அரசே ஒரு மொழியை திணிப்பது எதிர்காலத்தில் ஒரேதேசம்ஒரேமொழியை உருவாக்குவதற்கான சதி, சூழ்ச்சி.

★ சூழ்ச்சியைமுறியடிக்க மும்மொழிக்கொள்கையை எதிர்க்கிறோம்.

★ தி.மு.க. கூட்டணி உடையும் என்பது ஜெயக்குமாரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. அது நிறைவேறாது என அவருக்கே தெரியும்.

★ தி.மு.க. கூட்டணி உடையும் என கூறிய முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரின் ஆசை நிறைவேறாது.

★ தேர்தல் நேரத்தில் தான் கூட்டணி குறித்து பேசுவோம், மற்ற நேரங்களில் மக்கள் பிரச்சனைக்காக பேசுவோம், போராடுவோம்.

★ வரும் 5ந்தேதி நடைபெற உள்ள அனைத்து கட்சி கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

★ அனைத்து கட்சி கூட்டத்தை மறுக்கிற கட்சியினரின் கருத்து ஏற்புடையதா இல்லை.

★ இந்தியை படிக்க வேண்டும் என பா.ஜ.க.விற்கு ஆதரவாக பேசுவது அவர்களின் அரசியல் ஆதாயத்திற்கானது என்றார்.

# என்னை பற்றி பேச உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? சீமான்



சென்னை, மார்ச். 3

சென்னைவிமானநிலையத்தில்செய்தியாளர்களை சந்தித்த நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியதாவது:

★ என்னை எப்படி பாலியல் குற்றவாளி என்று எப்படி கூறுவீர்கள்?

★ என்னை பற்றி பேச உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

★ வழக்கு நிலுவையில் இருக்கும் போது எப்படி பாலியல் குற்றவாளி என்பீர்கள்?

★ என்னை குற்றம்சாட்டுபவர்கள் முதலில் தலைமை பண்புடன் நடந்து கொள்ளட்டும்.

★ தமிழகத்தில் நடக்கும் பாலியல் வன்கொடுமைகள் குறித்து கனிமொழியின் கருத்து என்ன? என கேள்வி எழுப்பியுள்ளார்.




# ரூ.100 கோடி வசூல் செய்த டிராகன் படம்

'லவ் டுடே' படத்தில் கதாநாயகனாக நடித்து ரசிகர்களின் கவனத்தை ஈர்த்த பிரதீப் ரங்கநாதன், அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் டிராகன் படத்தில் நடித்துள்ளார். கடந்த 21ந் தேதி திரையரங்குகளில் வெளியான இப்படம் மக்கள் மத்தியில் அமோக வரவேற்பை பெற்று வருகிறது. இந்த படத்தில் விஜே சித்து, ஹர்ஷத், சினேகா மற்றும் பிரபல இயக்குனர்களான மிஷ்கின் , கவுதம் வாசுதேவ் மேனன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். கதாநாயகிகளாக அனுபமா பரமேஸ்வரன், கயாடு லோகர் ஆகிய இருவரும் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு ரசிகர்களின் ஆதரவு பெருகி வருவதால் கூடுதல் திரையரங்குகளும் ஒதுக்கப்பட்டுள்ளதால், இந்த படத்தைக் காண ரசிகர்கள் கூட்டம் கூட்டமாக திரண்டு வருகின்றனர். இப்படம் முதல் நாளில் இருந்தே வசூலில் பட்டையை கிளப்பி வருகிறது. முதல் வாரத்தில் உலக அளவில் ரூ. 50 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக படக்குழு அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டது.

இந்தநிலையில், படம் வெளியாகி 9 நாட்களில் ரூ.100 கோடி வசூல் செய்துள்ளதாக படக்குழு அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

# சென்னையிலுள்ள தெருவோர கடையில் தோசை சுட்ட நடிகர் சோனு சூட்! வைரல் வீடியோ!



இந்தி, தமிழ், தெலுங்கு உள்பட பல்வேறு படங்களில் நடித்தவர் சோனு சூட். இவர் கொரோனா காலத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், ஏழை மக்களுக்கு நிதி உதவி, பஸ் வசதி உள்பட பல உதவிகளை வழங்கி , நாடு முழுவதும் பிரபலமடைந்தார். இவர் தமிழில் கள்ளழகர், ஒஸ்தி, அருந்ததி, தேவி, தமிழரசன் உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார்.

சமீபத்தில் சென்னையில் தெருவோர இட்லி கடைக்கு சென்றார். அங்கு தோசை சுட்டு அங்கிருந்தவர்களுக்கு கொடுத்தார். இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரல் ஆகி வருகிறது. வீடியோவில் சோனு சூட், உணவுக் கடையின் உரிமையாளர் சாந்தியை அறிமுகப்படுத்துவதுடன் தொடங்குகிறது, அவர் அனைத்து அற்புதமான உணவுகளையும் தயாரிக்கிறார். பின்னர் கேமரா சமையலறையை நோக்கி நகர்கிறது, அங்கு தேங்காய் சட்னி, சாம்பார் மற்றும் இட்லிகள் நிரப்பப்பட்ட வாளிகள் உள்ளன. ஒரு தட்டில் இட்லி மற்றும் வடையை கையில் ஏந்தி, சோனு சூட், 3 இட்லிகள் மற்றும் 2 வடைகளின் விலை வெறும் 35 ரூபாய் என கூறுகிறார். கடையின் உரிமையாளர், நடிகருக்கு 30 ரூபாய் தள்ளுபடி வழங்க முடிவு செய்கிறார். பின்னர், சோனு சூட் சமையல்காரராக மாறி தோசை சுட தொடங்குகிறார். சாதாரண தோசையின் விலை ரூ.15 என்று சாந்தி சொன்னாலும், சோனு சூட் விளையாட்டாக அந்த தொகையை ரூ.30 ஆக இரட்டிப்பாக்குகிறார். பின்னர் அவர் தனது குழுவிற்கு தோசையை பரிமாறுகிறார்.

இன்ஸ்டாகிராமில் இந்த அற்புதமான சமையல் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்ட சோனு சூட், "மேரி இட்லி சாம்பார் கி டுகான் (எனது இட்லி சாம்பார் கடை)" என்று பதிவிட்டுள்ளார்.

# வடிவேலுவின் 'கேங்கர்ஸ்' பட ரிலீஸ் அப்டேட்




சுந்தர்.சி இயக்கத்தில் காமெடியனாக நடிகர் வடிவேலு நடித்த படங்கள் அனைத்தும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பினை பெற்றவை. சுந்தர்.சி வடிவேலு இதுவரை மூன்று படங்களில் இணைந்து பணியாற்றியுள்ளனர். வின்னர் படத்தின் கைப்புள்ள, தலைநகரம் படத்தின் நாய் சேகர், நகரம் மறுப்பக்கம் படத்தின் ஸ்டைல் பாண்டி கதாபாத்திரங்கள் என்றென்றும் ரசிக்க கூடியவை.

இதற்கிடையில் 15 ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு மீண்டும் இந்த கூட்டணி இணைந்துள்ளது. அதாவது, சுந்தர்.சி இயக்கத்தில் வடிவேலு 'கேங்கர்ஸ்' படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் வடிவேலு மற்றும் சுந்தர். சியுடன் இணைந்து கேத்ரின் தெரசா, வாணி போஜன் மற்றும் பலர் நடிக்கின்றனர். இந்த நிலையில், காமெடி கதைக்களத்தில் உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்புகள் சமீபத்தில் நிறைவடைந்துள்ளது. இதில் நடிகர் வடிவேலு 5 கதாபாத்திரங்களில் நடித்துள்ளதாகவும், அதிலும் முக்கியமாக லேடி கெட்டப்பிலும் நடித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இதனால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகமாகி உள்ளது. இந்த நிலையில் தற்போது இப்படத்தின் ரிலீஸ் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி நாளை படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட உள்ளது.

# சாம்பியன்ஸ் டிராபி தோல்வி: உண்மையிலேயே ஏமாற்றமளிக்கும் செயல்திறன் ஜாஸ் பட்லர் பேட்டி



சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடந்து வருகிறது. இந்த தொடரில் நியூசிலாந்து, இந்தியா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்கா இங்கிலாந்து அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து 179 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதையடுத்து 180 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய தென் ஆப்பிரிக்கா 29.1 ஓவரில் 3 விக்கெட்டை மட்டும் இழந்து 181 ரன்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த தொடரில் லீக் சுற்றில் 3 ஆட்டங்களிலும் தோல்வி கண்ட இங்கிலாந்து ஒரு புள்ளியும் பெறாமல் தொடரில் இருந்து வெளியேறியது.

இந்நிலையில், இந்த ஆட்டத்தில் தோல்வி கண்ட பின் இங்கிலாந்து கேப்டன் (கேப்டனாக பட்லருக்கு கடைசி போட்டி) ஜாஸ் பட்லர் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது, இது உண்மையிலேயே ஏமாற்றமளிக்கும் செயல்திறன், இன்று நாங்கள் எங்கள் இலக்கை அடையவில்லை, மிகவும் ஏமாற்றமளிக்கிறது. இது பேட்டிங் செய்ய ஏதுவான மைதானம். ஆரம்பத்திலேயே நாங்கள் விக்கெட்டுகளை இழந்த நிலையிலும் டக்கெட் எங்களை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வந்தார், ஆனால், அதை எங்களால் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை.

உண்மையைச்சொல்லப்போனால், ஒரு முழு குழுவாக, எங்களுக்கு முடிவுகள் கிடைக்கவில்லை. அது எங்களிடமிருந்து நம்பிக்கையை இழக்கச் செய்கிறது. எங்கள் வீரர்களிடம் திறமை உள்ளது என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. அதனால் எங்களால் ஒரு சிறந்த அணியை ஒன்றிணைக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அதற்காக வீரர்களும் தங்களுடைய முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டியது அவசியம்.

நான் ஒரு உலகக்கோப்பை வென்ற கேப்டன் என்பது பெருமையாக உள்ளது. மேலும், அதுதான் எனது கேப்டன் பதவிக்காலத்தில் என்னுடைய சிறந்த நாளாகவும் இருந்தது. ஜோ ரூட் எனக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக இருந்துள்ளார். ஏனெனில், அவரும் தனது கேப்டன் பதவியை துறந்த பிறகு, அற்புதமாக விளையாடியுள்ளார். அதனால் நானும் அவரைப் பின்பற்றுவதுடன், அவரைப் போல சிறப்பாக செயல்படுவேன் என்று நம்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# சாம்பியன்ஸ் டிராபி: நியூசிலாந்துக்கு 250 ரன்கள் இலக்கு நிர்ணயித்த இந்தியா



சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடந்து வருகிறது.

இந்த தொடரில் நியூசிலாந்து, இந்தியா, தென் ஆப்பிரிக்கா,

ஆஸ்திரேலியா அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. இந்நிலையில், இந்த போட்டி தொடரில் துபாயில் உள்ள சர்வதேச கிரிக்கெட் ஸ்டேடியத்தில் இன்று நடைபெற்று வரும் 12வது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா நியூசிலாந்து அணிகள் ஆடி வருகின்றன.

இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து இந்தியாவின் தொடக்க வீரர்களாக ரோகித் சர்மா மற்றும் சுப்மன் கில் களம் கண்டனர். இதில் கில் 2 ரன்னிலும், ரோகித் 15 ரன்னிலும், அடுத்து வந்த விராட் கோலி 11 ரன்னிலும் அவுட் ஆகினர். இதன் காரணமாக இந்திய அணி 30 ரன்னுக்கு 3 விக்கெட்டுகளை இழந்தது.

தொடர்ந்து ஸ்ரேயாஸ் ஐயர் மற்றும் அக்சர் படேல் இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்டனர். இந்த இணை நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தது. இதில் அக்சர் படேல் 42 ரன்னுக்கு அவுட் ஆனார். இதையடுத்து கே.எல்.ராகுல் களம் புகுந்தார். மறுபுறம் நிலைத்து நின்று ஆடிய ஸ்ரேயாஸ் ஐயர் அரைசதம் அடித்த நிலையில் 79 ரன்களில் அவுட் ஆனார்.

இதையடுத்து கே.எல். ராகுலுடன், ஹர்திக் பாண்ட்யா ஜோடி சேர்ந்தார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கே.எல். ராகுல் 23 ரன்னில் அவுட் ஆனார். இறுதியில் இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 249 ரன்கள் எடுத்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஸ்ரேயாஸ் ஐயர் 79 ரன்கள் அடித்தார். நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி 5 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து 250 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து ஆட உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.